## ஆசிரியரின் குறிப்புகள்...




**ஸ்ரீ** ஸ்ரீநிவாஸ நிகேதனத்தின் பக்தர்களுக்கு அநேக நமஸ்காரங்கள்.



# ரத சப்தமி

06.02.2014

வியாழக்கிழமையன்று ஸ்ரீஅம்ருதபுரியில் ரத சப்தமி உத்ஸவம் கோலகலமாகக் கொண்டாடப்பட்டது. வேத மொழிகளின்படி சூரிய பகவான் தனது கிரணங்களை உலகின் தெற்கு திசையிலிருந்து வடக்கு திசை நோக்கி செலுத்த ஆரம்பிக்கும் நாள் ரத சப்தமி ஆகும். இது ஸ்ரீமந் நாராயணனின் ஆக்ஞையின்படியே அவருடைய கட்டளைகளை சூரிய பகவான் நிறைவேற்றுகிறார். இன்றிலிருந்து ஆறு மாத காலம் வரை. அதாவது ஆடி மாதம் வரை உத்தராயணம் என்று சொல்வர்.

உத்தராயண காலத்தில் பகற்காலம் குறைவாகவும் இரவு அதிகமாகவும் இருக்கும். சர்வ உலகத்தையும் படைத்த சர்வோத்தமன் ஸ்ரீமந் நாராயணன் ஜீவராசிகளைப் படைக்கும் முன்னே ஜீவராசிகளுக்கு அவர்களின் வாழ்க்கைக்கு வேண்டிய உபகரணங்களை படைத்தான். அந்த உபகரணங்களுக்கு வேண்டிய அபிமான தேவதைகளையும் படைத்து அவர்களுக்கு தேவையான அதிகாரத்தையும் கொடுத்தான்.

**சூரிய பகவானின் விசேஷங்கள்**

1) ஸ்ரீராமன் அவதாரம் செய்த வம்ஸம் சூரிய வம்ஸம்.

2) ஸ்ரீராமன் விஸ்வாமித்ரருடன் காலையில் சூரிய வணக்கம் செய்தான்.

3) ஸ்ரீ ஆஞ்சநேயரின் குருநாதர் சூரியன்.

4) நம் வாழ்விற்கு ஆரோக்யத்தைக் கொடுப்பது சூரிய வெளிச்சம்.

5) இராமாயண காலத்தில் மஹாலக்ஷ்மியான சீதைக்கு பதிலாக வேகவதி என்னும் பெயர் கொண்ட பக்தை. அமசாகவனத்தில் வாசம் செய்தாள். இராமனை மணம் செய்து கொள்ளுமாறு பிரார்த்தனை செய்தாள். அடுத்த கல்பத்தில் ஸ்ரீநிவாஸனாக வந்து பத்மாவதி என்னும் பெயரில் உன்னை மணம் செய்துகொள்கிறேன் என்றார் ஸ்ரீராமன். அப்பொழுது மஹாலக்ஷ்மித்தாய் கோலாப்பூரில் இருந்து வந்தார். பத்மாவதியின் திருமணத்திற்கு அவரை அழைத்து வருவதற்கு சூரியனை அனுப்பினார் ஸ்ரீநிவாஸன்.

அப்படித்தான் ஸ்ரீமந் நாராயணன் சூரிய பகவானை தனது வலது கண் மூலமாக உண்டு பண்ணினான். ஜீவராசிகளின் கண்களைப் பாதுகாக்கும் பொறுப்பையும் கண்களுக்கும் உலகத்திற்கும் வெளிச்சமும் உஷ்ணமும் கொடுக்கும் அதிகாரத்தையும் பகவான் அளித்திருக்கிறான். சூரிய பகவானின் உஷ்ணத்தினால் உலகம் உய்கிறது. அதனால் சூரிய பகவானையும், அவனைப் படைத்த ஸ்ரீமந் நாராயணனையும் ஆராதிக்கிறோம். அந்த ஆராதனை நாட்களில் ஒன்றுதான் ரத சப்தமி.

ஸ்ரீ அம்ருதபுரியில் முதல் வாகனமாக சூரிய பிரபையில் அம்ருதபுரிவாசனை முத்தங்கியில் அலங்கரித்து கோவிலை வலம் வந்து பகவானை சந்தோஷப்படுத்தி அவனது அருளைப் பெற்றோம். ஸ்ரீதேவி பூதேவி சமேதராய் காட்சி அளித்த வைபவம் மனதிற்கும் உடலுக்கும் உற்சாகமாய் இருந்தது இந்த முத்தங்கி சேவையை சூரியப்பிரபை, கருடவாகனம், சந்திர பிரபை மூன்றிலும் கண்குளிர தரிசித்தோம். சேஷவாகனம், ஹம்ஸ வாகனம், சிம்ம வாகனம், அனுமந்த வாகங்னகளில் முறையே தங்கக்கவசங்களுடனும், வெள்ளிக்கசங்களுடனும் அலங்கரித்து சேவை செய்ய உதவி செய்தனர் நம் மதிப்பிற்குரிய கைங்கர்யபரர்கள். சந்திர பிரபையில் பரந்தாமனை உலாக்கொண்டுவர சந்தர உதயம் வரை காத்திருந்தோம். ஆனால் காத்திருந்து வீண் ஆகவில்லை. சந்திர பிரபைகளில் அம்ருதபுரிவாசனை அந்த கஜேந்திரனுக்கு தர்சனம் கொடுத்தது போல் அலங்கரித்தனர். முத்தங்கியின் காட்சி ஸ்ரீதேவி பூதேவி நாச்சியார்களுடன்

காட்சி. முக்யமாக சிரித்த முகமும் கோவைச் செவ்வாயுடனும் வலது கரத்தில் சங்கையும் இடது கரத்தில் சக்கரத்தையும் வைத்துக்கொண்டு காட்சி தந்தது பரந்தாமனின் வெவ்வேறு அவதாரங்களில் எப்படியெல்லாம் காட்சி கொடுத்தார் என்பதை நினைவுபடுத்தியது.

வாமன, நாராயண, பத்மநாப, உபேந்தர ஹரி க்ருஷ்ண ரூபங்களில் கீழ்புற வலது கையில் சங்கம் பிடித்திருப்பார். வலது கையில் சங்கம் இருப்பதனால் சங்கநாதம் செய்வதற்கு தயாராக இருக்கிறான் என்று சிந்திக் வேண்டும். இம்முறை என் பக்தன். கஜேந்திரன், பூர்வ ஜன்மத்தில் பூஜை செய்த மந்த்ரங்களில் நாராயணா, அகிலகுரோ பகவன் நமஸ்தே என்று தன்னைக் காப்பாற்றுமாறு செய்ததால் ஒடி வந்து காப்பாற்றினேன் என்று சங்கு மூலம் உலகிற்கு தெரியப்படுத்தும் அருமையான காட்சிதான் அந்த அலங்காரம். குருநாதர் அருள்வாக்கு நமது ஸ்ரீநிவாஸ நிகேதனத்தின் வைபவங்களில் தவறாமல் பங்கு கொள்ளும் திருமதி மகேஸ்வரியின் பெற்றோர்கள், தங்கள் குடும்பத்தில் ஏதோ சில சிறு சிறு கஷ்டங்கள் அனுபவிப்பதாகவும் அவற்றை நிவர்த்தி செய்து கொடுக்குமாறும் வேண்டி நின்றனர்.

நமது குருநாதர் சிறிது நேரம் பரந்தாமனையே உற்றுப்பார்த்துவிட்டு உங்களது குடும்பத்தில், குல தெய்வத்தை ஏதோ வெல்லங்களில் ஆராதனை செய்வதுபோல் தெரிகிறது. அதை செய்து விடுங்கள் என்று கூறினார். அப்பொழுதுதான் அந்த கேள்வி கேட்டவருக்கு சட்டென்று ஞாபகம் வந்தது. அது என்னவென்றால், அவர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவரின் குலதெய்வம் சௌடாம்பிகை அம்மன். அந்த அம்மனுக்கு வருடாந்திர பூஜை செய்யும்போது கரும்புசாற்றில் செய்யப்பட்ட வெல்லங்களை செங்கல் ரூபத்தில் செய்து அவைகளை வீடு மாதிரியும் கோவில் மாதிரியும் அலங்காரம் செய்து அம்மனை ஆவாஹனம் செய்து வழிபடுவது வழக்கம். அந்த ஆராதனை செய்கிறேன் என்று உன் குல தெய்வத்திற்கு வேண்டிக் கொண்டால், குடும்பம் க்ஷேமம் அடையும் என்பதுதான் அருள்வாக்கு.

நம் குருநாதர் பக்தரின் குல தெய்வத்துக்காக அவர்கள் நடத்தும் வழிபாடுகளையோ வெல்லத்தின் மகிமைகளையோ முன்னமேயே அறிந்தவர் அல்லர். ஆனால் மந்தஹாஸத்துடன் கூடிய பேசும் பெருமாள் அவருக்கு பக்தர்களின் கஷ்டங்களையும் அவற்றை நீக்கும் வழிமுறைகளையும் கேட்டவுடன் சொல்கிறார். ஆதலினால்தான் அந்த மகான் நம்முடைய குருநாதர் (சந்திர பிரபை கிரிவலம் வந்த பின், வாகனங்களின்மேல் சேவை செய்த கருணாமூர்த்தியின் ஒயில் நடனம் நடைபெற்றது. கைங்கர்ய பரர்களுக்கும்) உத்ஸவத்தில் பங்கு பெற்ற எல்லா பக்தர்களுக்கும் மிக அழகான வஸ்த்ரமும் பிரஸாதங்களும் வழங்கப்பட்டன. ஸ்ரீகுருநாதரையும் அம்மா அவர்களையும் பரிவட்டம் கட்டி தரிசனம் செய்தது மனதை மகிழ்விக்கும் காட்சி.

ஜய் ஸீதாராம்!

# எதிர்மறை - கண்ணேறு

சமுதாயத்தில் உலவும் மக்களிடையே மேற்கூறிய இரண்டு சுபாவங்கள் மிகவும் மலிவாகக் காணப்படும் விஷயங்களாகும்.

எதிர்மறை : ஒருவர் தன் சுய உழைப்பினாலும் உண்மையான தொண்டுகளாலும், சிரத்தாபக்தியுடனும் இந்த கலியுகத்தில் வாழ்வது மிகவும் கடினமாகும். அவ்விதம் உயர்ந்த விட்டால் அவரைப் பார்த்து மகிழ்ச்சி அடைபவர் மிக மிகச் சிலரே, அவனுக்கென்ன கொடுத்து வைத்தவன் எப்படியோ வளர்ந்து விட்டான் என்று மொழிவது பலரிடையே நாம் அன்றாடம் கேட்கும் வார்த்தைகளாகும். அவ்விதம் உதிர்க்கப்படும் வார்த்தைகள் எவ்விதம் எதிர்ப்பதமாக மாறி அந்த அப்பாவியை உருக்குலைய வைப்பதுதான் கண்ணேறு - கண் திருஷ்டி என்பர். அதை தீய சக்தி என்றும் சொல்லலாம் உயர்ந்தவன் நித்தநித்தம் பாதிக்கப்படுவது ஶ்ரீமத் பகவான் ஒருவரே அறிவார்கள். அவரது தெய்வீகக் கண்களை பார்க்கும் பாக்கியம் பெற்றவர்கள் அந்த சக்தியின் மகிமையை உணர்ந்தவராவர். சாதாரண மக்களில் பலருடைய பார்வை மற்றவரை நோக்கும் போது ஏளனம், எக்காளம், ஏற்றத்தாழ்வுகளை பொருமல் போன்ற விஷம் கலந்ததாக இருக்கும். ஆனால், பணிவு, பாசம், கருணை, கனிவு, கண்ணியம் அன்பு கலந்ததாக இருக்க வேண்டும் இவையனைத்தும் நமது பகவான் ஶ்ரீமத் ஸ்வாமிகளிடம் பூரணமாகக் குடி கொண்டிருப்பதோடு தெய்வீகமும் பரிபூர்ணமாக காட்சியளிப்பதால் அவரது அருட்பார்வை தீட்க்ஷையில் குணமானவர்களில் அடியேனும் ஒருவன். அதன் மகிமையை மனதார உணர வேண்டும். இதனைத்தான் ''குருவைக் காண்பது தெளிவும் தெம்பும் பெறுவதேற்கே'' என்பர்.

சமீபகாலமாக ஏன் மூன்று (3) மாதங்களாக அடியேன் அனுபவிக்கும் நடைமுறையில் உண்மையாக நடந்து கொண்டிருப்பதை கொட்டி விடு என் மனது தடுத்தாலும் என் மனசாட்சி தினம் தினம் தூங்கவிடாமல் தூண்டுவதால்

மானசீகமாக ஸ்ரீமத் பகவான் திருவடிகளில் சமர்ப்பித்து உங்களிடையே நமது ஸ்தாபனமாத இதழ் மூலம் உலவ விட துணிந்து விட்டேன். (ஸ்ரீ ஸ்ரீனிவாஸ விஜயம்).

நான் வயோதிகன் 80 வயதுக்கு மேல் இளைஞன் என்று உரிமை கொண்டாடுவது அறிவுக்கு எட்டாததததுதான். இருப்பினும் இடையூறுகள் இருந்தும் முடிக்க வேண்டிய பணிகளை தவறாமல் செய்து கொண்டிருந்த அடியேனக்கு ஓராண்டாக பல தடங்கல்களும் உடல்நலிவுகளும் குடியேறின. 2 மாதத்திற்கு முன் இதய பாதப்பு ஏற்பட மருத்துவ சோதனையில் கட்டாயமாக ஈடுபட்டபோது மருத்துவர்கள் ஒருவித குறைபாடும் அறியமுடியாமல் உங்களுக்கென்ன ஒருவித குறையும் தெரியவில்லையே, இதயம் பலமாகவும் இரத்ததழுத்ம் கட்டுப்பாட்டிலும் சரியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. வயது காரணமாக சோர்வு காரணம் என்று அதுவும் நிச்சயமாக கூற முடியாமல் கொடுக்கவேண்டுமே என்று சில மருந்துகளை கொடுத்து வந்தார்கள். மகன் என் நிலையை விவரித்தபோது ஸ்ரீமத் பகவான் அவர்களும் அவருக்கு ஒன்றும் இல்லை. மனச்சோர்வே காரணம் என்றதோடு, உண்மை விரைவில் அவருக்கு புலப்படும் என்று அருள்வாக்கு கூறவதுபோல கூறி விட்டு ஓய்வு எடுத்துக்கொள்ளுமாறு ஆசிவாதித்தார்கள். அப்படியும் நான் முடிந்த வரை என் தொண்டுகளை செய்வது தொடர ஒவ்வொரு முறையும் ஒரு அனுபவம் ஏற்பட்டது.

என்னிடம் பேசவே அச்சப்படுபவர் ஒரு நாள் என்னிடம் நீங்கள் தள்ளாத வயதில்வீட்டில் இல்லாமல் தனியே வருவதோடு வரும் நாட்களில் பல மணி நேரம் தங்கள் பணிகளை செய்வது. இந்த வயதிற்கு ஒப்புமா அதனால் தான் நீங்கள் அடிக்கடி வருவது குறைந்து விட்டது என்று பரிவுடன் பேசியது என்னை சிந்திக்க வைத்தது இவரைப்போல இன்னும் சிலரும் தொடர்ந்தனர். இவர்களுக்கு ஏன் இவ்வளவு வருத்தம்? அவர்கள் பரிதாப நிலை கண்டு வியப்புறறேன்.

அடுத்து மற்றொரு அன்பர் நல்ல வசதி படைத்தவர். ஒரு நாள் தெய்வீக வைபவத்தில் என்னால் முடிந்த பணிகளில் ஈடுபட்டிருந்தபோது என் அருகில் வந்தமர்ந்து